Bundesamt
für Migration
und Flüchtlinge

## இன்றிகிறச்சியோன் - சமூக கலாச்சார சரித்திர சட்ட ஒழுங்கையிட்டிய தகவல் பத்திரம்

இது இன்டக்ரேசன் பயிற்சியில் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட அல்லது கடமைப்பட்டுள்ள புதிய புலம்பெயர்ந்தோர், மற்றும் அதோடு இன்டக்ரேசன் பயிற்சியில் பங்கேற்கும்படி கடமைப்பட்டுள்ள ஜெர்மனியில் நீண்டகாலமாக வாழும் வெளிநாட்டவர்க்குமானதாகும்

அன்பார்ந்த சகவாழ்-குடிமக்களே,

குடியிருப்புச் சட்டத்தின்படி, ஒரு இன்டக்ரேசன் பயிற்சியில் ஒருமுறை கலந்து கொள்ளும்படி நீங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள் அல்லது கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

<u>இன்றிகிறச்சியோன் வகுப்பு என்றால் என்ன?</u>

இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பின் முக்கிய பகுதியாக அதிகூடிய பட்சம் 600 பாடசாலை மணித்தியாலங்கள் மொழி வகுப்பு நடைபெறும். அத்துடன் 60 பாட மணித்தியாலங்கள் அடங்கிய ஜெர்மன் சமூக கலாச்சார மொழி சரித்திர சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பு வழங்கப்படும். மொழி கற்பிக்கும் வகுப்பு படி பல அத்தியாயமாக பிரிக்கப்படும். ஒவ்வொரு அத்தியாயத்திலும் 100 பாட மணித்தியாலங்கள் என்று பிரிக்கப்பட்டுள்ளது. இதில் முதல் 300 பாட மணித்தியால வகுப்புக்கள்; அடிப்படை மொழி வகுப்புக்களும், இதைத் தொடர்ந்து 300 பாட மணித்தியாலங்கள் உயர் தர மொழி வகுப்புக்களும் நடைபெறும்.

மொழியை கற்பிக்கும் வகுப்பில் உங்களது நாளாந்த வாழ்க்கையில் பேசுவதற்கும் எழுதுவதற்கும் தேவையான சொற்களை கற்பிக்கப்படும். இவ்வேளையில் காரியாலயத்துடன் தொடர்பு கொள்கையில் அல்லது உங்களது அயல் வீட்டாருடன் கதைப்பதற்கு தேவையான மொழியையோ அல்லது உங்களுடன் தொழில் புரிபவருடன் கதைப்பதற்கோ அல்லது கடிதம் எழுதுவதற்கோ அல்லது விண்ணப்பங்களை நிரப்பவதற்கு, தேவையானதை பூர்த்தி செய்யும் அளவிற்கு மொழி கற்பிக்கப்படும்.

உங்களுக்கு இந்த வழி நடத்தும் வகுப்பில் ஜெர்மன் வாழ்க்கை கலாச்சாரம் சம்பந்தமான விடையத்தில் தகவல்களையும் சட்டத்தையுமிட்டிய தகவல்களையும், கலாச்சார நவீனகால சரித்திர சம்பந்தமான விடையத்தையிட்டியும் கற்பிக்கப்படும்.

இதை விட விசேட இன்றிகிறச்சியோன் வகுப்புக்கள், உதாரணமாக எழுத வாசிக்க முடியாத பெண்களுக்கும் பெற்றோர்களுக்கும் இளைஞர்களுக்கும் வழங்கப்படும். இந்த வகுப்புக்கான நேரம் 960 பாடசாலை மணித்தியாலங்களாகும். நீங்கள் விரைவில் ஜேர்மன் மொழியை கற்றுக்கொள்வீர்களானால் இப்பாடத்தை விரைவான வகுப்பில் கற்றுக்கொள்ளலாம். இதை நீங்கள் இவ்வகுப்பில் 430 பாடசாலை மணித்தியாங்களில் கற்றுக்கொள்ளலாம்.

நீங்கள் எந்த அத்தியாயத்தில் இருந்து தொடங்கவேண்டும் என்பதை உங்களது பாடசாலை வகுப்பு தொடங்கும் முன்னர் ஒரு பரிட்சை மூலம் முடிவு செய்துக்கொள்ளலாம்.

<u>இறுதி பரிட்சையில் கலந்துக்கொள்வது</u>

இந்த வகுப்பு முற்றுபெறும் வேளையில் இரண்டு வித்தியாசமான பரிட்சைகள் நடத்தப்படும். ஒரு பகுதியில் ஜெர்மன் மொழிக்கான பரிட்சை, இப்பரிட்சையில் நீங்கள் போதிய அளவு ஜேர்மன் மொழியை கற்றுக்கொண்டதாக நிருபிப்பிர்களானாலும் அத்துடன் கலாச்சார சட்ட போன்றவையையிட்ய வழிநடத்தும் வகுப்பிலும் சித்தியடைவீர்களானால் இன்றிகிறச்சியோன் வகுப்பை வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வருகிறீர்கள். அத்துடன் இதற்காக இன்றிகிறச்சியோன் வகுப்புக்கான சான்றிதலையும் “Zertifikat Integrationskurs” பெற்றுக்கொள்வீர்கள்.

KNr. 630.036e tamil BAMF 2012-03

இந்த வகுப்பில் நீங்கள் சித்தியடையாத பட்சத்தில் உங்களுக்கு, நீங்கள் இவ்வகுப்பில் கலந்தக்கொண்டதற்காகவும் இவ்வகுப்பில் பெற்றுக்கொண்ட சான்றிதழ்களை அத்தாட்சிப் படுத்தி ஒரு படிவம் தரப்படும்.
இறுதி பரிட்சைக்கு கலந்துக்கொள்வதற்கு பணம் செலுத்த தேவையில்லை.

இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில்; கலங்துக் கொள்வதால் நீங்கள் பெறும் நன்மை

ஐரோப்பிய நாட்டைத் தவிர்ந்த வெளிநாட்டவர்கள் ஜெர்மன் நாட்டில் கால வரையரையற்ற வதிவிட(விசா) பெறுவதாயின் ஒரு சில நிபந்தனைகளை பூர்த்தி செய்யவேண்டும். இதில் அளவிற்கு தேவையான ஜெர்மன் மொழியும், அடிப்படை சட்ட, கலாச்சார, ஜெர்மன் வாழ்க்கையையிட்டிய விடையங்களையும் அறிந்திருக்கவேண்டும் என்பவை அடங்கும். இந்த வகுப்பில் வெற்றிகரமாக உங்களது பரிட்சையில் சித்தியடைந்தால் இந்த நிபந்தனையில் ஒன்று பூர்த்தியாகிவிடும். இதைவிட நீங்கள் விரைவில் ஜெர்மன் பிரஜா உரிமை பெற வாய்ப்புக்கள் உண்டு.

இதைவிட இந்த இன்றிகிறச்சியோன் வகுப்பில் பெற்ற மொழி அறிவு ஜேர்மன் நாட்டின் நாளாந்தம் வாழ்க்கையின் தராதரத்தை இலகுவாக்கும். அத்துடன் வேலை வாய்ப்புக்கான நிலையை உயர்த்தும்.

இன்டெக்ரேசன் பயிற்சிக்கு பதிவு செய்தல்

ஒரு இன்டக்ரேசன் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டியதிருந்தாலோ அல்லது அவசியம் ஏற்படுத்தப்பட்டாலோ, வேலைவாய்ப்பின்மை II நலன் என்பதற்கான எழுத்துப்பூர்வ உறுதிச்செய்தியை (தகுதிச் சான்றிதழ்) வெளிநாட்டவர் அலுவலகம் அல்லது அதற்காக செயல்படும் ஒரு அலுவலகத்தில் இருந்து பெற்றுக் கொள்வீர்கள். அதோடு நீங்கள் குடியிருக்கும் பகுதிக்கு அருகாமையில் உள்ள இன்டக்ரேசன் பயிற்சிகள் வழங்கும் பயிற்சி வழங்குநர்களின் பட்டியலையும் அதே நேரத்தில் பெற்றுக் கொள்வீர்கள்.

உங்களால் முடிந்தவரை விரைவாக, பயிற்சி வழங்குநரிடம் பதிவு செய்து கொண்டு உங்களது தகுதிச் சான்றிதழை சமர்ப்பிக்கவும். தகுதிச் சான்றிதழில் எது வரை கலந்து கொள்லலாம் எதுவரை செல்லுபடியாகும் என்பதற்கான தேதி காணப்பட்டால்...., கட்டாயம் இந்தத் தேதிக்குள் பயிற்சி வழங்குநரிடம் பதிவு செய்து கொள்ளவேண்டும்.நீங்கள் இவ்வகுப்பிற்காக பதிவு செய்யும் பாடசாலை எவ்வளவு காலத்தக்குள் இவ்வகுப்பு தொடங்கப்படும் என்று. உங்களுக்கு கண்டிப்பாக அறிவிக்க வேண்டும். இவ்வகுப்பிற்காக நீங்கள் பதிவு செய்த மூன்று மாதத்திற்குள் இவ்வுகுப்பை பாடசாலை தொடங்க வேண்டும். இக்காலத்தக்குள் வகுப்பு தொடங்காத பட்சத்தில் இப்பாடசாலை இதை உங்களுக்கு அறிவிக்க வேண்டும். நீங்கள் சொந்தமாகவே முடிவெடுத்துக்கொள்ளலாம் இதற்கு மேலும் இப்பாடசாலை வகுப்பிற்காக காத்திருப்பதா அல்லது வேறு பாடசாலைக்கு சென்று இவ்வகுப்பிற்காக பதிவு செய்வதா என முடிவெடுக்கலாம். இப்படி முடிவெடுக்கையில் இப்பாடசாலை உங்களுக்கு இவ்வகுப்பில் கலந்துக்கொகள்ளலாம் என்ற அனுமதி பத்திரத்தை திருப்பி தரவேண்டும்.

பயிற்சித்திட்டத்தில் முறையாக பங்கேற்றல்

ஒருங்கிணைத்தல் பயிற்சித்திட்டத்தின் நோக்கத்தை அடையும் பொருட்டு பயிற்சித்திட்டத்தில் முறையாக பங்கேற்க வேண்டும். அதாவது வகுப்புகளுக்கு வழக்கமாக வந்து இறுதி தேர்விலும் பங்கேற்பது. ஒரு பயணப்படி வாங்க விரும்பினால் அல்லது மொழி பாட மணித்தியாலங்களில்மீண்டும் பங்கேற்க வேண்டுமானால் பயிற்சித்திட்டத்தில் முறையான பங்கேற்பு அவசியமானதாகும். உங்களது பாடத்திட்ட வழங்குநர் உங்கள் வேண்டுகோளையடுத்து உங்கள் பங்கேற்புக்கான எழுத்துப்பூர்வ உறுதியை வழங்குவார். பொதுவாக, பாடத்திட்டத்தின் ஒரு பகுதியை நிறைவுசெய்தால் மட்டுமே பாடத்திட்ட வழங்குநரை மாற்ற முடியும்.

இன்றிகிறச்சியோன் வகுப்புக்கான கட்டணம்

இவ் இன்றிகிறச்சியோன் வகுப்புக்காக நீங்கள் 1.2 யூரோ படி ஒரு பாடசாலை மணித்தியாலத்திற்கு இப்பாடசாலைக்கு செலுத்த வேண்டும். உங்களால் செலுத்தப்படும் பணம் ஒரு அத்தியாயத்திற்கு 100 மணித்தியாலத்திற்குரிய பணமாகும். அத்துடன் சமூக கலாச்சார சட்ட ஒழுங்கை வழிநடத்தும் வகுப்பிற்காக, வகுப்பு ஆரம்பிப்பதற்கு முன்னரே இக்கட்டணத்தை செலுத்த வேண்டும். நீங்கள் வகுப்பிற்கு சமூகமளிக்காத வேளையில்

இதற்காக கட்டிய பணம் திருப்பி தரப்பட மாட்டாது. உங்களுக்கு சொந்த வருமானம் இல்லாத வேளையில் உங்கள் வாழ்க்கை செலவிற்கு பொறுப்பாக உள்ளவர் இப்பணத்தை செலுத்த வேண்டும்.
நீங்கள் வேலையில்லாப்பணம் II பெறுபவீர்களானால், அல்லது சமூக உதவிப் பணம் பெறுபவீர்களானால் அல்லது வருமானம் குறைவினால் இப்பணம் கட்ட முடியாத நிலையில், இப்பாடசாலைக்குரிய கட்டணத்தை கட்டாமல் விடுவதற்கு விண்ணப்பம் செய்து பணம் கட்டுவதை தவிர்த்துக்கொள்ளலாம். இப்பணத்தை மேற் கருதப்பட்டவாறு கட்டமுடியாத வேளையில் எழுத்து மூலம் நகரத்திற்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலத்திற்கு விண்ணப்பம் அனுப்ப வேண்டும். எது உங்களுக்கு பொறுப்பாக உள்ள கூட்டுமாநிலம் என்று முகவரி பட்டியலை பார்த்து அறிந்துக்கொள்ளலாம். இப்பணத்தை கட்டமுடியாத வேளையில் இதற்கான ஆதாரத்தின் பிரதியொன்றை அனுப்பி வைக்கவும். இவ்விண்ணப்பத்தை ஆகபிந்தியது உங்கள் வகுப்பிற்கான பாடசாலையில் பதிவு செய்யும் போது விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் இப்பணத்தை கட்டத்தேவையில்லை என்று கூட்டுமாநிலம் உங்களுக்கு அனுமதிக்கும் வேளையில் நீங்கள் வேலையில்லாதவர்க்கான பணம் II அல்லது சமூக உதவிப்பணம் நிறுத்தப்படும் வேளையில் அல்லது உங்களது வருமானத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்படும் போது இவைகளை உடனடியாக கண்டிப்பாக கூட்டுமாநிலத்திற்கு அறிவிக்க வேண்டும்.

உங்கள் பணத் தேவைக்கான ஆதாரத்தின் பிரதியொன்றை அனுப்பி வைக்கவும். (பொருத்தமான சான்றிதழின் பிரதி, வேலையில்லாதவர்க்கான பணம் II, சமூக உதவிப்பணம், வீட்டுவசதி உதவிப்பணம், மாணவர் கடன [BAFöG],˙, குழந்தை உதவிப்பணம், புகலிடம் கோருபவர்களுக்கான உதவிப்பணம் குறித்த சட்டத்தைப் பின்பற்றுவதற்கான உதவிப்பணங்கள், பகல் நேரக் கவனிப்புக் கட்டண விலக்கு, வானொலி, தொலைக்காட்சி உரிம (GEZ) கட்டண விலக்கு, உள்நாட்டு சமூக சீட்டு, இன்னும் பல). இவ்விண்ணப்பத்தை சாத்தியம் என்றால், நீங்கள் பாடத்தைத் தொடங்க முன்னர் சமர்ப்பிக்கவும்

<u>செலவு செய்பவற்றை திரும்ப பெற்றுக் கொள்வது</u>

டிசம்பர் 8, 2007க்குப் பின் நடந்த இறுதித் தேர்வை சரியாக செய்து முடித்திருந்தால் நீங்கள் ஏற்கனவே செலுத்திய தொகையின் 50 % செலவை இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர்க்கான அரசு அலுவலகத்தில் திரும்பப் பெறலாம். இருப்பினும், பயிற்சியில் பங்கு பெறுவதற்கான தகுதிநிலை உறுதிப்படுத்தல் மற்றும் இறுதித் தேர்வு நிறைவுசெய்தலுக்கு இடையே இரண்டு வருடங்களுக்கு மேல் கடந்திராவிட்டல் மட்டுமே இது பொருந்தும். உங்கள் மீட்புபணத்தை பெறுவதற்கு இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் அரசு அலுவலகத்தின் மண்டல அலுவலகத்தில் ஒரு விண்ணப்பத்தை பதிவு செய்ய வேண்டும்.

<u>பயணச் செலவுகள்</u>

உரிய அலுவலகத்திடமிருந்து உங்களுக்கு வேலையில்லாதவர்களுக்கான உதவிப்பணம் மிமி (ஆர்பீற்ஸ்லோசெங்கெல்ட் மிமி) கிடைக்கிறது என்றாலும் நீங்கள் கட்டாயம் இண்டக்ரேசன் பயிற்சியில் கலந்து கொள்ள வேண்டும் என்றாலும், அவசியமான பயணச் செலவுகளை நீங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் அரசு அலுவலகம் உங்கள் செலவுகளை வழங்குவதில் விலக்கு அளிக்குமானால், பொதுவாக பயணச் செலவுகளுக்கென ஒரு உதவித்தொகையைப் பெறுவீர்கள். இருப்பினும், பயிற்சி மையம் நீங்கள் குடியிருக்கும் இடத்தில் இருந்து 3 கிலோமீட்டருக்குள் இருக்க வேண்டும். அடிப்படைக் கொள்கைப்படி, உங்கள் இருப்பிடத்துக்கு அருகில் உள்ள பயிற்சி வழங்குநர் இடத்துக்கு பயணம் செய்தால் மட்டுமே செலவுகள் உங்களுக்கு வழங்கப்படும். இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்ந்தோர் அரசு அலுவலக மண்டல அலுவலகத்தில் உங்கள் பயணச் செலவுகளுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டுமா என்பதை உங்கள் பயிற்சி வழங்குநரிடம் சரிபார்த்துக் கொள்ளவும்.

கொள்கைப்படி, பயிற்சியை முடித்திருந்தால் மட்டுமே பயணச் செலவுகள் வழங்கப்படும்.

பின்–தொடர்தல் மொழிப் பயிற்சியை மீண்டும் பெறுதல்

மொழித் தேர்வில் ஜெர்மன் மொழியை போதுமான படிப்புடன் உங்களால் பேச முடியவில்லை என்றால், ஒரு தடவை என்ற அடிப்படையில் மொழிப் பாடத்தின் 300 பாடத்திட்ட மணித்தியாலங்கள் வரைக்கும் திரும்ப படிக்க அனுமதிக்கப்பட்டு, மீண்டும் ஒருமுறை இலவசமாக மொழிப் பரீட்சையை எடுக்கவும் முடியும். . இருப்பினும், பாடங்களுக்கு நீங்கள் ஒழுங்காகச் செல்ல வேண்டும்.

ஒரு கல்விப் பயிற்சியில் பங்கேற்கிறீர்கள் என்றால் மொழிப் பரீட்சையில்பங்கேற்பது அவசியமில்லை.

பாட மணித்தியாலங்களை மீண்டும் தொடர விரும்பினால் அரசு அலுவலகத்தின் உரிய பிராந்திய அலுவலகத்தில் ஒரு விண்ணப்பத்தைப் பதிவு செய்ய வேண்டும்.

பயிற்சியில் சேருவதற்கான கட்டாயக் குறிப்புகள்

ஒரு இன்டக்ரேசன் பயிற்சியில் கலந்து கொள்ளும்படி வேலைவாய்ப்பின்மைப் பயன் II என்பதற்கு பொறுப்புடைய ஒரு அலுவலகத்தின் மூலம் அல்லது வெளிநாட்டவர் அலுவலகத்தின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டால், முடிந்தளவு சீக்கிரமாக ஒரு இன்டக்ரேசன் பயிற்சியில் சேர்வதற்கான பயிற்சி வழங்குநரிடம் விண்ணப்பித்து பயிற்சியில் சரியான முறையில் கலந்து கொள்ள வேண்டும்.

- அப்படிச் செய்யவில்லை என்றால், மற்ற காரியங்களுடன், இங்கே கீழே உள்ளவையும் உங்களுக்கு நேரிடலாம்:
- உங்கள் குடியிருப்பு அனுமதி நீட்டிப்புத் தொடர்பான முடிவைப் பாதிக்கலாம்.
- சமுதாய உதவி பெற்றுக் கொண்டிருந்தால், பணம் வழங்குதல் குறைக்கப்படலாம்.
- தேவைப்பட்டால் வெளிநாட்டவர் அலுவலகத்துக்கு அழைத்துவரப்பட்டு ஒரு பாடத்துக்கு ஒரு யூரோ என்கிற அடிப்படையில் மொத்த இன்டக்ரேசன் பயிற்சிக்கும் ஓரே தொகையாக செலவு செய்த பணம் அனைத்தையும் செலுத்த வேண்டும்.
- அபராதம் விதிக்கப்படலாம்.

இன்டக்ரேசன்_ பயிற்சியில் சரியாக கலந்து கொள்ளாவிட்டால் வேலைவாய்ப்பின்மை பயன் ன்பதற்கு பொறுப்புடைய ஒரு அலுவலகத்திற்கு அல்லது வெளிநாட்டவர் அலுவலகத்திற்கு உங்கள் பயிற்சி வழங்குநர் தெரியப்படுத்த வேண்டும்.

நீங்கள் அறிந்து கொள்ள வேண்டிய மற்ற விஷயங்கள்

இந்த விதிமுறைத் தாளில் குறிப்பிடப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் பயிற்சி வழங்குநரிடம், உங்கள் உள்ளூர் புலம்பெயர்தல் அலுவலகம் அல்லது தகுந்த மண்டல அலுவலகத்தில் கிடைக்கும். www.bamf.de என்கிற வலைத்தளத்தில் இருந்தும் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விதிமுறைத் தாளில் ஒருங்கிணைத்தல் பயிற்சியில் பங்கேற்பதற்கான மிக முக்கிய விபரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கொண்ட விபரங்களை உங்கள் பயிற்சி வழங்குநர் வழங்குவார்.

புலம்பெயர்தல் ஆலோசனை அலுவலகங்கள் மற்றும் இளைஞர் புலம்பெயர்தல் சேவைகள் வழங்கும் சலுகைகளையும் குறித்துக் கொள்ளவும். இந்த அலுவலகங்களால் தேவையான விண்ணப்பங்கள் வழங்குதல், உங்கள் சந்தேகங்களைத் தீர்த்தல், பிரச்சனைகளைத் தீர்த்தல் ஆகியவற்றில் உதவி செய்து சரியான ஒருங்கிணைப்பு பயிற்சியை உங்களுக்கு தேடித் தர முடியும். உங்கள் உள்ளூர் புலம்பெயர்தல் அலுவலகம், இடம்பெயர்தல் மற்றும் புலம்பெயர்வோர்க்கான அரசு அலுவலகத்தின் தகுந்த மண்டல அலுவலகம் அல்லது இணையத்தில் www.bamf.de

வலைத்தளத்தில் அண்டைப்பகுதியில் உள்ள புலம்பெயர்தல் ஆலோசனை அலுவலகம் மற்றும் இளைஞர் புலம்பெயர்தல் சேவைகளை அறிந்து கொள்ளலாம்.

ஒரு ஒருங்கிணைப்புப் பயிற்சியின் போது நிலையான விபத்துக் காப்பீடில் சேர மாட்டீர்கள் என்பதைக் குறித்துக் கொள்ளவும்.